அந்தக் கடிதத்திலே மாண்புமிகு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தலைமையிலே திட்டமிட்டபடி அந்தக் குழு சென்று அதிலே பங்கேற்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள், ஆடு பகை, குட்டி உறவு என்று. அதைவிட இன்னொரு பழமொழியை இன்னும் கொஞ்சம் நாகரிகமாகவே சொல்வார்கள், பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று. அதைப்போல இந்த நடவடிக்கை அமைந்திருக்கிறது. இதையொட்டிதான் இந்த நடவடிக்கை அமைந்திருக்கிறது. பிரதமர் எந்தக் காரணத்திற்காக இலங்கைக்குச் செல்வதைத் தவிர்த்திருக்கிறார் என்பதற்கான காரணத்தைக் கூட இதுவரையில் முழுமையாக வெளிப்படுத்தவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஏற்கெனவே ஐந்து முறை வெளிநாடுகளில் நடந்த காமன்வெல்த் அமைப்பின் மாநாட்டிற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர்கள் போகாமல் இருந்திருக்கிறார்கள். இப்போதும் போகப் போவதில்லையென்று பிரதமர் அறிவித்திருக்கிறார். ஆனால், எதற்காக, எந்த உணர்வுகளுக்காகப் போகப் போவதில்லையென்பதற்கான காரணத்தை இதுவரையிலே வெளிப்படுத்தாதது, ஒட்டுமொத்த தமிழர்களுடைய வேதனையை மிகுதியாக்குகிற ஒரு செயலாக இருக்கிறதென்பதுதான் நமக்கு மட்டற்ற வேதனை. நேற்றைய முன்தினம்கூட, ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும், நியூசிலாந்திலிருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைக்குச் சென்றபோது இலங்கையிலே, தமிழர்களுக்கு எதிராக இப்படிப்பட்ட கொடுமைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று செய்தியாளர்களை அழைத்து செய்தியாளர்கள் கூட்டம் நடத்த முயன்றபோது, அவர்களுடைய பாஸ்போர்ட்டுகளையே பறித்திருக்கிறது இலங்கை சிங்கள அரசு. வெளிநாடுகளிலிருந்து சென்ற இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை. இந்த மாநாடு நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, பத்திரிகைகளைப் பொறுத்தவரையிலும்கூட, இந்தப் பத்திரிகைகள் பங்கேற்கலாம், இந்தப் பத்திரிகைகள் பங்கேற்கக் கூடாது என்பது போன்ற தடைகள் இருக்கின்றன. இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றபோது, இந்தியா அதில் பங்கேற்பதென்பது உலகத்திலிருக்கின்ற 8 கோடி தமிழர்களுடைய நெஞ்சங்களிலே மேலும் மேலும் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போலாகும்.



2013 நவம்பர் 12] [முனைவர் செ.கு. தமிழரசன்]

இதனால் என்ன நிகழ்ந்துவிடப் போகிறதென்று பலரும் விமர்சிக்கலாம், போனால் என்ன? போகாவிட்டால் என்ன? போனால் என்ன நிகழ்ந்துவிடப் போகிறது? போகாவிட்டால் என்ன நிகழ்ந்துவிடப் போகிறதென்று கேட்கலாம். இந்தியா இந்த காமன்வெல்த் அமைப்பிலிருக்கும் மிகப் பெரிய நாடு. இதுதான் மிகப் பெரிய நாடு. அமெரிக்கா இதில் இல்லை, சீனா இதில் இல்லை, ரஷ்யா இதில் இல்லை, ஜப்பான் இதில் இல்லை. இருக்கின்ற நாடுகளிலேயே மிகப் பெரிய நாடு நம்முடைய இந்தியத் திருநாடுதான். இந்திய நாடு இலங்கையிலே நடக்க இருக்கக்கூடிய காமன்வெல்த் மாநாட்டிற்குப் போகாமல் இருப்பதன்மூலம் உலகம் முழுவதும் நம்முடைய பிரச்சினைக்கான, நம்முடைய உணர்வுகளுக்கான தீர்வினை எதிர்நோக்கி ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு இது ஒரு நல்ல நடவடிக்கையாக இருக்க முடியும்.

இன்றைக்கு அவையிலே வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிற இந்த நாள் இருக்கிறதே, இலங்கைக்கு முதன் முதலில், முதலும் கடைசியுமாக, தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் சென்று, இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பேசிய நாள் தான் இந்த நாள். 86 ஆண்டுகளுக்கு முன்பு அகிம்சை என்கிற தத்துவத்தை, அந்த அறவழியை உலகத்திற்குக் காட்டிய தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள், இலங்கைக்குச் சென்ற நாள் தான் இன்றைய தினம். நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நாளில்தான், இன்றைக்கு, இந்த அவையிலே அகிம்சா உணர்வின் காரணமாக இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். இந்தியா பங்கேற்கவில்லையென்று சொன்னால், ஓர் உலகத் தாக்கம் உருவாகும். நம்முடைய எதிர்ப்புணர்வை எப்படிக் காட்டுவது? எந்த வகையிலே காட்டுவது? இதுதான் சரியான தீர்வென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து மூன்றாவது முறையாக, ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இராஜபக்சேவை போர்க் குற்றவாளியென்று பிரகடனப்படுத்த வேண்டுமென்று ஒரு தீர்மானம்; இலங்கைமீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம். இப்போது இரண்டாவது முறையாக இந்தக் கருத்தை வலியுறுத்தி, இந்த அவையிலே நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம்.

[முனைவர் செ.கு. தமிழரசன்][2013 நவம்பர் 12

மத்திய கூட்டாட்சி என்பது மாநிலங்களும் உள்ளடக்கிய ஒரு கூட்டாட்சிதான். மத்திய அரசு மட்டும் பாராளுமன்றத்தில் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், அப்படியே கொண்டுவந்துவிட முடியாது. பாதிக்கும் மேற்பட்ட மாநிலங்கள் அதை அங்கீகரித்தால்தான் அது சட்டவடிவம் பெறும். எந்தச் சட்டத் திருத்தத்தையும் மத்திய அரசு உடனடியாகக் கொண்டுவந்துவிட முடியாது. ஆக மாநிலம் என்பதோ மத்தியம் என்பதோ கூட்டாட்சித் தத்துவத்திலே இயங்கிக் கொண்டிருக்கிற ஓர் அமைப்பு, ஒரு சமஷ்டி. பாகிஸ்தான்மீது போர் நடத்துவதற்கு முன்பு, வங்காள தேசத்திற்காக வங்க மக்களுக்காக, மேற்கு வங்காளத்தில் இப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆக, அதைப்போலத்தான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். சிந்துபாத் கதைகூட முடிந்துவிடும், இலங்கை மக்களுடைய பிரச்சினைகள் முடியுமா என்று தெரியவில்லை.

பிற்பகல் 6–20

கூரிய பார்வையும், நேரிய முடிவும், வீரிய செயலும் புரியக்கூடிய நம்முடைய புரட்சித் தலைவியைப்போன்ற ஓர் ஆளுமை, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தலைமை, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தேசத்திற்கு வழிகாட்டுகிற நிலைமை எப்போது உருவாகிறதோ, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தேசத்திற்கு அப்படிப்பட்ட ஓர் ஆளுமை என்றைக்கு வருகிறதோ, அன்றைக்குத்தான் இதற்கான விடிவு கிடைக்கும். அதுதான் ஒரே தீர்வு. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே அளப்பரிய ஆற்றலும், தலைசிறந்த பட்டறிவும்மிக்க ஓர் ஆளுமை தமிழகத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவியினுடைய அந்தத் தலைமையில்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இருக்கிற மாநிலங்களிலேயே அப்படிப்பட்ட ஒரு முதல்வர் நமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கிறார். அவர் இன்றைக்கு இந்த உணர்வுகளை இங்கே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். இதற்குத் தீர்வும், முடிவும் வரும் காலம் நிச்சயம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த நாள் நெருங்கி, நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது. அந்த ஆளுமை வருகின்றபோது, (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைக்கு நிச்சயம்



2013 நவம்பர் 12] [முனைவர் செ.கு. தமிழரசன்]

தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முன்மொழியப்பட்ட, இந்தியா காமன்வெல்த் மாநாட்டிலே பங்கேற்கக் கூடாது என்று மீண்டும் இரண்டாவது முறையாக வருத்தத்தோடு சுட்டிக்காட்டி வலியுறுத்துகிற இந்தத் தீர்மானத்தை உலகமெல்லாம் இருக்கிற ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகமும், உலகம் முழுக்க பரவி வாழுகின்ற ஒட்டுமொத்த ஜனநாயக மனிதாபிமானமுள்ள கோடிக்கணக்கான மானுடச் சமூகமும், உற்று நோக்கியுள்ளது. உலகத்தில் இன்னல்படுகின்ற, சுதந்திரத்திற்காக, ஜனநாயகத்திற்காக, உரிமைகளுக்காக ஏங்கித் தவிக்கிற கடைசி மனிதனையும் ஆறுதல்படுத்தி, அவனைப் பாதுகாப்பதற்கு உலகத்தில் ஓர் ஆட்சித் தலைவர், மக்கள் தலைவர் இருக்கிறார் என்பதை நினைவுகூர்கிற வகையிலே, அன்னைத் தமிழகத்தின் இந்த மாட்சிமைபொருந்திய சட்டமன்றத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இன்று இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு “நெஞ்சு கொதிக்கிறது ஈழத் தமிழர்களுடைய இன்னல் கண்டு” என்று சொன்ன அந்த வார்த்தை, அரை நூற்றாண்டு கடந்த பின்பும் நீடிப்பது என்பது மனித குலத்திற்கே அவமானம். வலிமைமிக்க ஒரு சமூகம் தொடர்ந்து தன்னுடைய சொந்த மண்ணிலேயே, அரசியல் அபிலாஷைகளை, அரசியல் விடுதலையை, அரசியல் உரிமையைப் பெறுவதற்காக, தன் இனத்தின் ஒட்டுமொத்த, எல்லா வகையான உரிமைகளையும் இழந்து, உலகத்தினுடைய கடைசி அரசியல் அநாதைகளாக, அடிமைகளாக இருக்கிறது என்றால், அது ஈழத்திலே வாடுகின்ற நம்முடைய தொப்புள்கொடி உறவாக இருக்கிற தமிழ் இனம்தான்.

இப்போது ஒரு சில மாதங்களுக்கு முன்பு, சிரியாவிலே நடந்த உள்நாட்டுப் போரிலே, நடந்த தாக்குதலிலே ஒரே நாளில் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டவுடன், அடுத்த ஒரு மணி நேரத்தில் அமெரிக்கா

[திரு. உ. தனியரசு] [2013 நவம்பர் 12

தனது போர்க் கப்பலை அங்கே அனுப்புகிறது. அவர்கள் ஐ.நா. மனித உரிமைக் குழுவிடம் போய் மனு செய்யவில்லை. ஐ.நா. மன்றத்தையே அவர்கள் கூட்டவில்லை. அந்தப் போர்க் கப்பல்கள் நகர்கின்றன என்றவுடன், ரஷ்யாவும், சீனாவும் போர் தொடுக்க வேண்டாம், பேச்சுவார்த்தை நடத்துங்கள்; அப்படி அணு ஆயுதங்கள், அழிவு ஆயுதங்கள் இருந்தால், அதை ஆய்வுக் குழுமூலம் ஆய்வு நடத்தி முடிவெடுங்கள் என்று சொல்லுமளவுக்கு, ஒரு மணி நேரத்தில், உள்நாட்டு கலவரத்தில் பாதிக்கப்பட்ட அந்த அப்பாவி மக்களைப் பாதுகாக்கிற உலக அரசுகள் இருக்கிற இந்த உலகத்திலேதான் நாமும் வாழ்கிறோம். அப்படிப்பட்ட இந்த உலகத்திலே ஒரு வலிமையான, உலகத்திலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லுகின்ற இந்த நாடு, சுதந்திரத்தை, ஜனநாயகத்தை உலகத்திற்குப் போதித்த அண்ணல் காந்தி பிறந்த இந்த நாடு, காந்தியின் தேசம், எட்டு கோடி தமிழகச் சமூகத்தினுடைய குரலை மதிக்காமல், ஈழத் தீவில் பாசிச, சிங்கள இனத்திற்காக மனிதாபிமானமில்லாத ஒரு அரசை நடத்துகிற, அரசு பயங்கரவாதம் நடத்துகிற ராஜபக்சே கூட்டுகின்ற, அந்த மண்ணில் நடக்கின்ற காமன்வெல்த் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வது என்பது நம்முடைய இந்திய தேசத்திற்கு அவமானம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய வரலாற்றில் இப்படி ஒரு நிலை இருந்திருக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு அடக்குமுறை நடந்த, ஒரு பாசிச கொலைவெறி பிடித்த நாட்டில் நடக்கும் மாநாட்டில் இந்தியா பங்கேற்கிறது. அப்படிப்பட்ட காமன்வெல்த் மாநாட்டினுடைய முடிவில், காமன்வெல்த் நாடுகளினுடைய தலைவராக அதே ராஜபக்சே முடிசூட்டப்படுகிறார் என்கின்ற அவமானம், தீரா பழிச்சொல் இந்திய வரலாற்றில் துடைத்தெறியப்பட முடியாத ஒன்று. அதற்கு, தமிழர்களாகிய நாங்கள் மிகுந்த வேதனைப்படுகிறோம், வருத்தப்படுகிறோம், இந்தியாவிற்கு நேரப் போகின்ற அந்தத் தீராப் பழிச்சொல்லை தமிழர்களால் ஏற்றுக்கொள்ளவோ, சகித்துக்கொள்ளவோ இயலாது என்ற வரியைத் தீர்மானத்தில் சேர்த்து வருத்தப்படுகிற முதல்வர், இந்தியாவிலே, இந்த உலகத்திலே யார் இருக்க முடியும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர? *(மேசையைத் தட்டும் ஒலி)* பாரத தேசத்தினுடைய ஒரு குடிமகனாக இருந்து, தமிழர்களுடைய ஒட்டுமொத்த காவல் அரணாக இருக்கின்ற,



2013 நவம்பர் 12] [திரு. உ. தனியரசு]

நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிற்கு நேருகின்ற இந்த பழிச்சொல்லை, அவமானத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல், இதைச் சுட்டிக்காட்டி, திரும்பத் திரும்பச் சொல்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 6–25*

ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நாளிலிருந்து, மூன்று முறை இதே சட்டமன்றத்திலே வைர வரிகளாகக் கொண்டுவரப்பட்டு, ஈழத் தமிழர்களுடைய விடுதலைக்காக நிறைவேற்றப்படுகின்ற இத்தகைய தீர்மானங்கள் உலகத்தில் எந்த அரசும், எந்த நீதிமன்றமும் நிராகரித்துவிட முடியாத அறிவுசார்ந்த தீர்மானங்கள் ஆகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று தீர்மானத்திலேயே சுட்டிக்காட்டியதைப்போன்று, உலக நாடுகள், உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற தமிழ் சமூகங்களிடையே, ஐ.நா. சபையின் மேற்பார்வையிலே பொது வாக்கெடுப்பு நடத்தி, தமிழ் ஈழத்தை அங்கீகரிக்க வேண்டுமென்கின்ற தீர்மானம் உலகத்தில் வேறு எந்த நாட்டினுடைய சட்டமன்றத்திலும் நிறைவேற்றப்படவில்லை. நம்முடைய தமிழ் சமூகத்தினுடைய காவல் அரணாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைத் திராணியோடு கொண்டுவந்து நிறைவேற்றமுடியும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர் சட்டத்தினுடைய ஆட்சியை நடத்துகிறார். சட்டத்தைப் பற்றியும், ஜனநாயகத்தைப் பற்றியும், சுதந்திரத்தைப் பற்றியும் அறிந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்போல உலகத்தில் வேறு யாராலும் இப்படிப்பட்டத் தீர்மானத்தை துணிந்து கொண்டு வரமுடியாது.

தீர்மானம் கொண்டுவந்த பிறகும், அதை விமர்சனத்திற்கோ, விவாதத்திற்கோ யாராலும் உட்படுத்த முடியவில்லை. என்ன காரணம்? உலகத்தினுடைய இயற்கைச் சட்டத்தாலும், மனிதனால் எழுதப்பட்ட சட்டத்தாலும் குற்றவாளி என்று அடையாளம் காட்ட முடியாத ஒரு மானுட சமூகமாக, மானுட வரலாற்றிலேயே இருந்திராத ஓர் ஆட்சித் துறைத் தலைவராகத் திகழ்கின்ற நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மட்டுமே *(மேசையைத் தட்டும் ஒலி)* அரை நூற்றாண்டுக்கும் மேலாக அங்கே வதைபட்டு, அரசியல் உரிமையின்றி, அரசியல் விடுதலையின்றி தவித்து வருகின்ற கோடிக்கணக்கான நம்முடைய

[திரு. உ. தனியரசு] [2013 நவம்பர் 12

தமிழ் சமூகத்திற்கு அரசியல் விடுதலையைப் பெற்றுத் தருகிற சக்தி இருக்கிறது என்பதால்தான், அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு, மனிதாபிமானத்துடன் அந்த மூன்று வலிமையுள்ள தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார்கள்.

அந்தத் தீர்மானங்களையெல்லாம் நிராகரித்துவிட்டு, காமன்வெல்த் மாநாட்டிலே இப்பொழுதும் இந்தியா மிகவும் தைரியமாக, பயமில்லாமல் கலந்துகொள்கிறது. இன்னும் அம்மா அவர்கள் சொல்கிறார்கள், அந்த மாநாட்டிலே கலந்துகொள்வதென்பது அந்தக் குற்றவாளியைப் பாதுகாப்பதற்கு ஒப்பானது; ராஜபக்சேவைப் பாதுகாப்பதற்கு ஒப்பானது; அவரை அங்கீகரிப்பதற்கு ஒப்பானது; நம்முடைய ஒட்டுமொத்த இந்தியாவே அப்படிப்பட்ட இனப் படுகொலையை ஆதரிப்பதற்கு ஒப்பானதாக இருக்கும் என்றெல்லாம் சுட்டிக்காட்டிய பிறகும்கூட, இந்தியா வாய்மூடி மவுனியாக இருந்து அந்த இனப் படுகொலையை நடத்திய இலங்கை அரசின் ராஜபக்சேவை அந்த அமைப்பின் தலைவராக முடிசூட்டுவதற்கு, அந்த மாநாட்டிலே பங்கேற்று, அங்கீகரிப்பதற்குத் துணிந்திருப்பது, காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே, இந்திய நாட்டினுடைய வரலாற்றிலே நிகழ்ந்த ஆட்சிப் பிழைகளிலேயே ஒரு மிகப் பெரிய பிழை. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தின் மூலமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைச் சுட்டிக்காட்டி, மிகுந்த வருத்தத்தோடு மீண்டும் வலியுறுத்தி, நாளை இலங்கையிலே நடைபெறவிருக்கின்ற வெளியுறவுத் துறை அமைச்சர்களுடைய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது மற்றும் 15, 16, 17 ஆகிய மூன்று நாட்கள் நடைபெறவிருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டில் ஒரு நபரைக்கூட, இந்தியாவினுடைய பிரதிநிதியாக பங்கேற்கச் செய்யக்கூடாது என்கின்ற தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்துவதற்காக இப்பொழுது இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். உலகத் தமிழ் சமூகத்தினுடைய உணர்வுகளையெல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே இவ்வாறு தீர்மானமாகக் கொண்டுவந்து முன்மொழிந்திருப்பதை என் சார்பாக வரவேற்று, நன்றியோடு பாராட்டி, வழிமொழிகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.



2013 நவம்பர் 12]

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாக நாளை இலங்கையிலே காமன்வெல்த் அமைப்பின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கலந்து கொள்கின்ற நிகழ்வு இருக்கும்பொழுது, அதில்கூட இந்தியாவின் பங்கேற்பு இருக்கக்கூடாது என்பதை மனதில் வைத்து, இந்தியாவில், உலகத்தில் வாழுகின்ற ஒட்டுமொத்தத் தமிழர்களுடைய உணர்வைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடைசி நிமிடம் வரை போராடி, இன்று இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், ஒட்டுமொத்த தமிழ் சமுதாய மக்கள் அனைவரும் உண்மையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 6–30*

நாம் இந்த மாநாட்டில் கலந்து கொண்டால்தான் இந்தியாவின் கருத்தை இலங்கையில் தெரிவிக்கமுடியும் என்று இந்திய அரசு சொல்கிறது. முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி காலத்திலிருந்து இந்தியாவும் இலங்கையும் தொன்றுதொட்டு Agreement போட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால், அந்த Agreement–களை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டு, ஏற்றுக்கொண்டதில் ஏதாவது ஒன்றை செயல்படுத்தி இருக்கிறதா என்று சரித்திரத்தைப் பார்த்தால் ஒன்றைக்கூட செயல்படுத்தவில்லை. அப்படி இருக்கும்போது, தற்போது அங்கு நடைபெறும் மாநாட்டில் கலந்துகொண்டு தமிழர்களின் நிலையைத் தெரிவிக்கவேண்டும் என்று சொல்வது எதற்குச் சமம் என்று புரியவில்லை.

நேற்றுகூட பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது. இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய நாட்டு பாராளுமன்ற உறுப்பினரும், நியூசிலாந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கையிலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதாவது இலங்கையிலே நடைபெறும் மாநாட்டிலே கலந்துகொள்ள அவர்கள் சென்றிருக்கிறார்கள். வடக்கு மாகாணத்திலே உள்ள இலங்கைத் தமிழ் மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைப் பார்க்க அவர்கள் இருவரும்

[திரு. பி.வி. கதிரவன்] [2013 நவம்பர் 12

சென்றிருக்கிறார்கள். ஆனால், அவர்களை இலங்கை அரசு கைது செய்திருக்கிறது என்று சொன்னால், அவர்களது நாட்டிற்கு விருந்தாளிகளாக வந்துள்ளவர்களை இலங்கை அரசு கைது செய்துள்ளது என்றால், அவர்கள் எவ்வளவு பெரிய கொடுமையானவர்கள் என்பதை இன்று மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு தெரிந்துகொள்ள வேண்டும். தமிழக மக்களின் உணர்வுகளை எடுத்துச் சொல்கின்றவகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னர், இலங்கை அரசைப் பற்றியும், ராஜபக்சேவைப் பற்றியும் இந்தச் சட்டமன்றத்திலே மூன்று தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மூன்று தீர்மானங்களின்மூலம் தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வுகளை, அப்படியே ஒப்பிட்டு இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு இதற்கு செவிசாய்க்கவே மறுக்கிறது.

இங்கு தமிழகம் இந்தியாவினுடைய கடைசி பகுதி என்பதால் தமிழனுடைய பேச்சு வட இந்தியாவிற்குச் செல்வதில்லை என்று நான் கருதுகிறேன். தமிழகத்திலிருந்து ஒருவர் இந்தியாவின் பிரதமராக வரவேண்டும் என்ற நிலையை அவர்களே இந்தியா முழுவதும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடைசி நிமிடம் வரை, இலங்கைத் தமிழர்களுக்காக, இந்தத் தமிழ் மக்களுடைய உணர்வை வெளிக் கொண்டுவருகிற வகையிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழ் மக்களுடைய உணர்வைப் புரிந்துகொண்டு, இந்தத் தமிழ் மக்களின் உணர்வை வெளிப்படுத்தி, இலங்கையில் நடைபெறும் அந்த மாநாட்டில் இந்திய அரசின் சார்பாக யாரும் பங்குகொள்ளக்கூடாது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உண்மையிலே அந்த நாட்டு தமிழ் மக்களை நினைத்து இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதை எங்களது அகில இந்திய ஃபார்வார்டு பிளாக் கட்சி மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டுகிறது.



2013 நவம்பர் 12] திரு. பி.வி. கதிரவன்]

அதுமட்டுமல்ல, இந்தச் சட்டமன்றத்திலே மூன்று முறை தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டும்கூட, மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு ஒட்டுமொத்தமாக செவிசாய்க்காதது உண்மையிலேயே மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் மன்மோகன் சிங் அரசு தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால், தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைப் புரிந்துகொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இதுபோன்ற தீர்மானங்களை இந்தச் சட்டமன்றத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். முன்மொழிந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை எங்களது அகில இந்திய ஃபார்வார்டு பிளாக் கட்சியின் சார்பிலே மனமார வரவேற்று, வழிமொழிந்து நிறைவு செய்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுவாமி விவேகானந்தரின் திருவாக்கால் ஈர்க்கப்பட்டு, தமிழர்கள் நலன், தமிழகத்தின் நலன் ஒன்றையே கருத்தில்கொண்டு, ஓய்வில்லாமல் உழைத்து, அனைத்துத் துறைகளிலும் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட முன்மாதிரியாகத் தமிழகத்தை திகழ வைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துவரும் சீரிய முயற்சிகளை உலகின் பல்வேறு தரப்பிலிருந்து பாராட்டுவதை நாம் நன்கு அறிவோம்.

இலங்கைத் தமிழர்கள்மீது அக்கறை உள்ள ஒரு தலைவர் என்று சொன்னால், நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்றே சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஒரு நிகழ்வை எடுத்துக்கொண்டாலும், அதில் இறுதிவரை போராடி வெற்றி காணவேண்டும் என்ற மன உறுதி கொண்ட ஒரு முதலமைச்சர் என்றால், நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

எதை எடுத்துக்கொண்டாலும், அதை அரசியல் இலாபத்திற்காக என்று இல்லாமல் மக்கள், தமிழக மக்கள், தமிழினம், உலகளாவிய தமிழினம் சிறப்பாக இருக்கவேண்டும்; இலங்கையில் நடந்த

[திரு. ரா. சரத்குமார்] [2013 நவம்பர் 12

படுகொலைகளை உன்னிப்பாகக் கவனித்து, அங்கு சிங்களவர்களுடன் இணைந்து வாழ்கின்ற ஒரு நிலைமை உருவாக வேண்டும் என்று ஒரு முறையல்ல, பல முறை, 8–6–2011 முதல் மூன்று சிறப்பானத் தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 6–35*

இது எதைச் சுட்டிக்காட்டுகிறது? இலங்கையிலே உள்ள இலங்கைவாழ் தமிழர்கள் சிறப்பாக வாழவேண்டும்; சிங்களவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர்களின் வாழ்வாதாரம் உயரவேண்டும். அவர்களுக்கும் உரிய மரியாதை கிடைக்க வேண்டும் என்று ஏற்கெனவே, 8–6–2011 அன்று 'இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்' என்ற அளவில் ஒரு தீர்மானமும், பிறகு, கடந்த மாதம் 24 ஆம் தேதி, 'காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது, அதில் இந்தியாவின் சார்பில் எந்தவொரு பிரதிநிதித்துவமும் இருக்கக்கூடாது' என்ற அளவில் ஒரு தீர்மானமும் சிறப்பாக இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இன்று இறுதி நேரம் என்று சொன்னாலும், நாம் இறுதி வரை போராடினால்தான் வெற்றி கிடைக்கும், அது, மத்திய அரசில் கேட்காதவர்களுக்கும் கேட்கும் என்ற நிலையை உருவாக்கிக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இன்று இத்தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள்.

தமிழகம் இந்தியாவில்தான் இருக்கிறதா என்று சில முறை நமக்கு நாமே கேட்டுக்கொள்கிற சூழ்நிலை உருவாகி இருப்பது போல்தான் நமக்குத் தெரிகிறது. தமிழர்களை அவர்கள் மதிப்பதில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். அவர்கள், 'தமிழக மீனவர்கள்' என்றுதான் சொல்கிறார்கள்; 'இந்திய மீனவர்கள்' என்றுகூட சொல்வதில்லை. ஆனால், அங்குகூட நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் நமது மீனவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களுக்கு உரிய முறையிலே அங்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று தொடர்ந்து பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதி வருகிறார்கள். ஆனால், அவர் பேசுவதில்லை. பேசாத ஒரு பிரதமரை நாம் பெற்றிருக்கிறோம் என்பது அனைவருக்கும் தெரியும். *(குறுக்கீடுகள்)*



2013 நவம்பர் 12]

*(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் எழுந்து பேச முயன்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Controversy இல்லாமல் பேசுங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் பேசும்போது பதில் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* இல்லை, நீங்கள் பேசும்போது பதில் சொல்லலாம். *(குறுக்கீடு)* நீங்கள் பேசும்போது பதில் சொல்லலாம். *(குறுக்கீடு)*

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், உலகளாவிய தமிழர்கள் இதுகுறித்து பேசி வருகிறார்கள். உலகளாவிய தமிழர்களுக்கு இந்த உணர்வு புரிகிறது. அவர்கள் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து, உணர்ந்திருந்தால், தமிழர்களின் உணர்வுகளை உணர்ந்திருந்தால் . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசும்போது அவர் பேசியதற்கு பதில் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* இல்லை. நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசலாம். *(குறுக்கீடுகள்)*

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தவறாகப் பேசிய பிரதமர்' என்று நான் அதைத் திருத்திக்கொள்கின்றேன். 'பேசத் தெரியாத' என்பதற்குப் பதிலாக 'தப்பாகப் பேசிய பிரதமர்' என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எதையும் சரியாகப் பேசியிருந்தால் இன்று அது தீர்க்கப்பட்டிருக்கும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், உட்காருங்கள். *(குறுக்கீடு)* அவருடைய கருத்தை அவர் சொல்லியிருக்கிறார். நீங்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய கருத்தை அவர் சொல்லியிருக்கிறார். நீங்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ரா. சரத்குமார்:** உண்மை நிலைகளை . . . *(குறுக்கீடு)*

[2013 நவம்பர் 12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவருடைய கருத்தை அவர் சொல்லியிருக்கிறார். நீங்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்கும். நீங்கள் பேசுவதும் அவைக் குறிப்பில் இருக்கும். (குறுக்கீடு)*

**திரு. ரா. சரத்குமார்:** உண்மை நிலைகளை எடுத்துச் சொல்லும்போது கோபம் வரத்தான் செய்யும். தமிழக மக்கள் மட்டுமல்ல, உலகளாவிய தமிழ் மக்கள் இந்த உணர்வைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் . . உட்காருங்கள்.*

**திரு. ரா. சரத்குமார்:** இன்று சிறப்பான தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான தீர்மானத்தை . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள் 'பேசாத பிரதமர்' என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் பேசும்போது, "எங்கள் பிரதமர் பேசுவார்" என்று சொல்லிவிடுங்கள். இரண்டும்* record *ஆகிவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அதில் ஒன்றும் இல்லை. நீங்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள்தானே பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள்தானே பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லுங்கள்.* record *ஆகிவிடும். இரண்டு கருத்துகளும் அவைக் குறிப்பில் இருக்கும். (குறுக்கீடு) இரண்டு கருத்துகளும் அவைக் குறிப்பில் இருக்கும். (குறுக்கீடு) இது ஒரு முக்கியமான தீர்மானம். இதில் மாறுபட்ட விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) இதில் அதிக விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) அவர் பேசியதற்கு நீங்கள் பதில் சொல்லிவிட்டால் சரியாகிவிடும். (குறுக்கீடு) அவர் சொன்னதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். நான் அதை அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவர் பேசியதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். அதை நான் அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.*



2013 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

*இதில் அதிக விவாதம் வேண்டாம். இது ஒரு நல்ல தீர்மானம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன், இது ஒரு நல்ல தீர்மானம். (குறுக்கீடு) அவருடைய கருத்தை அவர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லுங்கள். இரண்டும்* record *ஆகிவிடும். அவ்வளவுதான். (குறுக்கீடு) அவர் பேசியதற்கு நீங்கள் பதில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசியதற்கு நீங்கள் பதில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) அவர் பேசியதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். அதற்கு நான் அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடு) அவர் பேசியதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். நான் அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடு) ஒரு நல்ல தீர்மானத்தின்போது கருத்து தெரிவிக்கையில் குழந்தைகள் மாதிரி செய்வது சரியல்ல. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

*பிற்பகல் 6–40*

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே இலங்கை தமிழர்களுக்காக, தமிழக மீனவர்களுக்காகப் பேசாத பிரதமர் என்றுதான் நான் சொல்ல வந்தேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவசரப்பட்டு அவர்கள் எழுந்துவிட்டார்கள். வேறு ஒன்றுமில்லை. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இப்போது அவர் சரியாகச் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

**திரு. ரா. சரத்குமார்:** ஆகவே, இலங்கைத் தமிழர்களுக்காகப் பேசாமல் இருந்த காரணத்தால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சிறந்த தீர்மானத்தைக் கொண்டுவந்து அவரைப் பேச வைக்க வேண்டுமென்று இதை முன்மொழிந்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ரெங்கராஜன், உட்காருங்கள். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினையிலே அவருடைய கருத்தை அவர் சொல்லியிருக்கிறார். இந்தப் பிரச்சினையிலேதான் பிரதமர் பேசவில்லை என்று சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அதைப் பற்றிய கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) மற்றதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் பேசும்போது சொல்லுங்கள், நான் அதைப் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

[2013 நவம்பர் 12

**திரு. ரா. சரத்குமார்:** ஆகவே, இன்றைய தினம் சிறப்பான தீர்மானத்தை முன்மொழிந்து, நாளை நடக்கவிருக்கிற வெளியுறவுத் துறை அமைச்சர்களுக்கான கூட்டத்திலோ மற்றும் 15 ஆம் தேதி முதல் தொடங்கவிருக்கிற காமன்வெல்த் மாநாட்டிலோ இந்தியாவின் எந்தவிதப் பங்கேற்பும் இருக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டை நாம் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, திரு. ஜேஜி. பிரின்ஸ், உட்காருங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** சிறப்பான தீர்மானத்தை தமிழக மக்கள் மட்டுமல்ல, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** இது சிறப்பான தீர்மானம். அதாவது நாளை நடைபெறவிருக்கின்ற வெளியுறவுத் துறை அமைச்சர்களுக்கான கூட்டத்திலோ மற்றும் 15 ஆம் தேதி நடைபெறவிருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டிலோ இந்தியாவின் எந்தவிதப் பங்கேற்பும் இருக்கக்கூடாது என்று மீண்டும் முன்மொழிந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானத்தை நான் வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமெங்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற இரண்டு கோடிக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள், ஈழத்திலே தங்கள் சொந்த மண்ணில் தங்களால் வாழ முடியாமல், பிற நாடுகளிலே புலம்பெயர்ந்து வாழுகின்ற அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கக்கூடிய தமிழீழ மக்களுடைய மனித உரிமைகளை



2013 நவம்பர் 12] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

மீட்டெடுக்க வேண்டும், அவர்களுடைய மண்ணுரிமையை மீட்டெடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த அவையில் ஏற்கெனவே பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

கடந்த அக்டோபர் மாதம் 24 ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், இலங்கையிலே நடைபெறவிருக்கின்ற CHOGM என்று அழைக்கப்படக்கூடிய காமன்வெல்த் மாநாட்டில் இந்தியாவினுடைய பிரதமர், வெளியுறவுத் துறை அமைச்சர் உட்பட எந்தவொரு பிரதிநிதியும் கலந்துகொள்ளக் கூடாது, கடந்த 2008–2009 ஆம் ஆண்டுகளில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக மனித உரிமைமீறல் நடத்திய ராஜபக்சேவிற்கு மதிப்பளிக்கக்கூடிய வகையில் அல்லது அவருடைய நடவடிக்கைகளை அங்கீகரிக்கக்கூடிய வகையில் யாரும் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தையொட்டி இன்று இன்னொரு தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 6–45

உலகமெங்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மக்களுக்காக, 1984 ஆம் ஆண்டு ஈழத் தமிழ் மக்கள்மீது இலங்கையிலே அன்றைய அரசால் தொடுக்கப்பட்ட வன்முறைகளிலேயிருந்து தப்பித்துக்கொள்வதற்காக தமிழகத்திற்கு வந்த தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கு, அவர்களுக்கு உதவி செய்வதற்காக, மாணவப் பருவத்திலேயிருந்து இந்த ஈழத் தமிழ் மக்களுடைய பிரச்சினையிலே உணர்வுபூர்வமாகப் பங்கேற்றுக் கொண்டவன் என்ற அடிப்படையில், கடந்த செவ்வாய்க்கிழமையில் இருந்து நேற்று வரையில், ஆப்பிரிக்க நாட்டினுடைய ஒரு தீவாக இருக்கக்கூடிய மொரீஷியஸ் நாட்டில் நடைபெற்ற, புலம்பெயர்ந்த தமிழர்களுடைய கூட்டமைப்பு மாநாட்டில் ஏறக்குறைய ஒரு வாரம் கலந்து கொண்டு, தமிழகச் சட்டமன்றம் அவசரமாகக் கூடுகிறது என்பதைக் கேள்விப்பட்டவுடனேயே, என்னுடைய பயணத்தை முடித்துக் கொண்டு, இந்த நிகழ்ச்சியிலே நான் பங்கு பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

அந்த மாநாட்டிலே பல்வேறு விதமான கருத்துகள் வலியுறுத்தப்பட்டன. புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மக்களைத் தமிழகம் காப்பாற்றுமா, இல்லையா என்ற கேள்விக்குறி பல தமிழர்களிடத்திலே எழுந்தது. அப்போது எனக்குக் கொடுக்கப்பட்ட

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2013 நவம்பர் 12

அந்த நேரத்தில் நான் சில முக்கியமான கருத்துகளை வலியுறுத்தினேன். தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும், என்றைக்கும் தமிழர்களைக் கைவிட்டதில்லை. 1948 ஆம் ஆண்டு இலங்கையில் குடியுரிமை மறுக்கப்பட்டு, வாக்குரிமை மறுக்கப்பட்டு, 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையிலேயிருந்து வெளியேற வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது, அவர்களுக்கு வாழ்வளித்தது தமிழகம். அதேபோல, பர்மாவில் ஒரே நேரத்தில் இராணுவம் அனைத்துத் தமிழர்களுடைய வணிக நிறுவனங்களையெல்லாம் மூடியபோது, எங்கே செல்வது என்று தவித்த தமிழர்களுக்கு வாழ்வளித்தது தமிழகம். இப்படியாக, ஒவ்வொன்றாக கருத்துகளை அடுக்கி, 'எப்போதெல்லாம் இதுபோன்று தமிழர்களுக்குப் பாதிப்பு வருகின்றதோ, பல்வேறு காரணங்களாலே அதுபோன்ற பல்வேறு சூழல்கள் வருகின்றதோ, சில நேரங்களில் வேண்டுமானால் கூடுதலாக, குறைவாக சில அரசியல் நடவடிக்கைகள் இருந்திருக்குமேயொழிய, தமிழகம், தமிழக மக்கள், தாய்த் தமிழக மக்கள் என்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களைக் கைவிட்டதில்லை' என்ற கருத்தை நான் வலியுறுத்தியிருக்கிறேன். தாய்த் தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும், தமிழக மக்களுக்கு, புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு அன்றும் இன்றும் என்றும் கைகொடுக்கக்கூடிய ஒரு மாநிலமாக இருக்கும் என்ற கருத்தை வலியுறுத்தினேன்.

ஒட்டுமொத்தமாக நாம் அனைவரும் இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானம் ஒன்றை ஏற்கெனவே நிறைவேற்றினோம். 'பிரதமர், வெளியுறவுத் துறை அமைச்சர், எந்த அதிகாரியும் அல்லது வேறு யாருமே அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது' என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். ஆனால், இப்போது நம்முடைய ஆதங்கமெல்லாம் வெளியுறவுத் துறை அமைச்சர் அந்த மாநாட்டில் கலந்துகொள்கிறார் என்ற தகவல் வந்திருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டிலும், நான் ஒரு சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். அந்தக் கருத்திலே மற்றவர்களுக்கு மாறுபாடு இருக்கலாம். இந்தச் சட்டமன்றத்திலே, கடந்த 24 ஆம் தேதி, 'பாரதப் பிரதமர் உள்பட யாரும் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது' என்ற தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னால், நிச்சயமாக பாரதப் பிரதமர் கலந்து கொண்டிருப்பார். எனவே, அந்தத் தீர்மானத்தினுடைய விளைவாகத்தான் பாரதப் பிரதமர் கலந்துகொள்ளவில்லை என்பதை நாம் அங்கீகரிப்பதற்குத்



2013 நவம்பர் 12] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

தயங்கக்கூடாது என்பதுதான் என்னுடைய தனிப்பட்ட கருத்து. ஒட்டுமொத்தமாக வெளியுறவுத் துறை அமைச்சரோ அல்லது அதிகாரியோ அல்லது யாரும் கலந்துகொள்ளவில்லை என்று சொல்லியிருந்தால், இன்னும் சந்தோஷமாக இருந்திருக்கும். ஆனால், பாரதப் பிரதமர் கலந்துகொள்ளவில்லை என்பது தன்னிச்சையான முடிவாக நிச்சயமாக இருக்கமுடியாது. அது இந்தச் சட்டமன்றத்திலே, இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினுடைய விளைவாகத்தான் இருந்திருக்க முடியும். அதற்கு ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டு, அதை வரவேற்பதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்றுகூட நான் கருதுகிறேன். இதிலே எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை. ஏனென்று சொன்னால், நம்மைக் காட்டிலும், இந்தச் சமுதாயத்தைக் காட்டிலும், இந்த நாடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தைப் பதிவு செய்திருக்கிறார். நம்முடைய சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்திற்கு மதிப்பளித்துதான் பாரதப் பிரதமர் அந்த மாநாட்டிலே கலந்துகொள்ளவில்லை என்று அவர் இங்கே குறிப்பிட்டு, பிரதமர் அவர்கள் தமிழர்களுக்குச் செய்த துரோகத்தை மூடி மறைக்கப் பார்க்கிறார். ஆனால், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது உரையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு முறையல்ல, இரண்டு முறையல்ல, ஐந்து முறை பாரதப் பிரதமர்கள் இந்தக் கூட்டமைப்பு மாநாட்டிலே, காமன்வெல்த் மாநாட்டிலே கலந்துகொள்ளவில்லை. அப்பொழுதெல்லாம் எந்தத் தீர்மானத்தின் மூலமாக அவர்கள் அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ளாமல் புறக்கணித்தார்கள்? *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்பொழுது ஏதாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா? அதைப்போல் அவர் இந்தச் சட்டமன்றத் தீர்மானத்திற்கு மதிப்பு அளித்திருந்தால், பிரதம மந்திரி மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக இந்தியாவின் சார்பாக யாருமே அதில் கலந்துகொள்ளாமல் இருந்தால்தான் *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர் இந்தத் தீர்மானத்திற்கு மதிப்பு அளித்திருக்கிறார் என்று பொருள். ஆகவே, தயவுசெய்து அவர் செய்திருக்கின்ற தவறை

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2013 நவம்பர் 12

மூடி மறைக்க முயற்சிக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இது மிக முக்கியமானத் தீர்மானம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால்தான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தயவுசெய்து இந்தக் கருத்தை விவாதிக்க அனுமதியுங்கள். அதாவது controversy அல்ல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தாக நிறையச் சொல்லிவிட்டீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவன் அல்ல. ஆனால், ஒரு தீர்மானத்தை நாம் முழுமையாகப் பார்க்க வேண்டும். அதில் இருக்கக்கூடிய பாதக, சாதக அம்சங்கள் இரண்டையும் பார்ப்பதுதான் சரியானதாக இருக்க முடியும். இல்லையென்றால் அது சரியாக இருக்காது. அதாவது, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இன்னொரு கருத்தை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் முடித்துவிட்டு உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ராஜபக்சே அரசை, இலங்கை அரசை போர்க் குற்றவாளி அரசாக, போர்க் குற்றவாளியாகக் கருத வேண்டும், பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்று தீர்மானம் தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. பாரதப் பிரதமரோ, வெளியுறவுத் துறை அமைச்சரோ, அதிகாரிகள் உட்பட ஒருவரும் கலந்துகொள்ளக் கூடாது என்று கடந்த



2013 நவம்பர் 12] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

24–10–2013 அன்று தீர்மானம் நிறைவேற்றினோம். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் தலைமையில், இருக்கக்கூடிய அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து, ஏன் ஒரு குழுவாகச் சென்று பாரதப் பிரதமரைச் சந்தித்து, இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கக் கூடாது என்பதுதான். (குறுக்கீடு) இவ்வாறு செய்திருந்தால், இக்கருத்தில் 'மனவருத்தம்' என்பதைக் காட்டிலும், வேறு விதமான வார்த்தைகளைக்கூடப் பயன்படுத்தியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்ததுதான் சட்டமன்றம். இது சட்டமன்றத்தினுடைய தீர்மானம்தான். தனித் தீர்மானம். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உலகத் தமிழர்கள் அனைவருக்குமான ஒரு வரலாற்றுத் தீர்மானம். பல்வேறு காலகட்டங்களில் உலகத் தமிழர்கள் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரம் இழந்து, எங்கு குடியிருக்கிறோம் என்று தெரியாமல் நிலை தடுமாறி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்வுள்ள ஒரு பிரச்சினை என்பதால், நாளைதான் கடைசி நிமிடம் என்று சொன்னாலும் அதற்கு முன்பு இன்று (மேசையைத் தட்டும் ஒலி) சரியாக இன்னும் 12 மணி நேரம்தான் இருக்கிறது என்ற நிலையிலும், இந்த 12 மணி நேரத்திற்குள்ளாகக்கூட தங்களுடைய உணர்வுகளை, தங்களுடைய எண்ணங்களை, தங்களுடைய வேதனைகளை மைய அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முயற்சியால் விரைவாகக் கூட்டப்பட்ட கூட்டம்தான் இந்த அவசரக் கூட்டம். இவ்வளவு தமிழர்களுடைய உணர்வுகளை மதித்து, அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்பதற்காக கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்தில் தமிழர்களின் உணர்வுகள் நீர்த்துப்போகின்ற வகையிலே உங்களுடைய கருத்துகள் இருக்கக்கூடாது என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு பிரதமர் அவர்களை மையக் கருத்தாக வைத்துதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பிரதமர் செல்லவில்லை என்பதற்காக ஆறுதல் சொல்லத் தேவையில்லை. தயவுசெய்து,

[திரு. கே.பி. முனுசாமி] [2013 நவம்பர் 12

அந்தக் கருத்தை நீங்கள் வாபஸ் பெற்றுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்றபொழுது அதற்குத் தொடர் நடவடிக்கைகள் நிச்சயமாக இருக்க வேண்டியது அவசியம். மிக மிக உணர்வுபூர்வமான பிரச்சினை என்பதை நான் அறியாமல் பேசவில்லை. நான் மாணவப் பருவம்தொட்டே இந்தப் பிரச்சினையில் எவ்வளவு தூரம் போராடி வந்திருக்கிறேன், எத்தனை முறை சிறை சென்றிருக்கிறேன் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். (குறுக்கீடு) நான் இப்போது சொல்ல விரும்புவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நல்ல தீர்மானத்தில் மாறுபட்ட கருத்தைச் சொல்லி அவையின் நேரத்தை வீணாக்காதீர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், ஒரு நல்ல தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் நீங்கள் உரையை முடியுங்கள்.

*பிற்பகல் 6–55*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஓரிரு நாள்கூட அவகாசம் கொடுக்காமல், இந்தத் தீர்மானத்திற்காக நீங்கள் கூட்டம் கூட்டியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) ஆனால், இதேபோல் ஈழத் தமிழர்கள் மட்டும் அல்ல. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் 12 நிமிடங்களுக்கு மேல் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 12 நிமிடங்களுக்கு மேல் நீங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ** (குறுக்கீடு)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 நவம்பர் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தில், மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி, கட்டபொம்மனா அல்லது எட்டப்பனா என்பதை மட்டும் அவர் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிருஷ்ணசாமி எட்டப்பனாக இருக்க மாட்டான். இருந்த வரலாறும் கிடையாது. உங்களைக் காட்டிலும் களம் இறங்கிப் போராடுபவன், போராடிக் கொண்டிருப்பவன் நான் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, உங்கள் கருத்தைப் பதிவு செய்து விட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் 15 நிமிடங்களுக்குமேல் பேசி விட்டீர்கள். நீங்கள் பேசியதைப் பதிவு செய்து விட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடு) தொடர்பின்றி நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் இருக்காது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இது ஒரு முக்கியமான தீர்மானம், இந்த நேரத்தில் நீங்கள் நேரத்தை வீணடிக்கிறீர்களே, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவம் புரியாமல் நீங்கள் எங்கோ

[பேரவைத் தலைவர்] [2013 நவம்பர் 12

கொண்டு போகிறீர்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தச் சட்டமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நான் மனமுவந்து வழிமொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த அக்டோபர் 24 ஆம் தேதி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அக்டோபர் 24 ஆம் தேதி நம்முடைய சட்டமன்றப் பேரவையிலே, காமன்வெல்த் மாநாடு குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இரண்டு அம்சங்களைக் கொண்டதாக இருந்தது. முதலாவது அம்சம், காமன்வெல்த் உச்சி மாநாட்டிலே, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, அனுமதி இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் 15 நிமிடங்களுக்கு மேல் பேசியுள்ளீர்கள். நீங்கள் இந்த தீர்மானத்தை விட்டு வேறு எங்கோ போகப் பார்க்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) தீர்மானத்தின்மீது பேசாமல் நீங்கள் வேறு எங்கோ போகிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

இரவு 7–00

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அக்டோபர் 24 ஆம் தேதி இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இரண்டு அம்சங்களைக் கொண்டதாக இருந்தது. முதலாவது அம்சம்,



2013 நவம்பர் 12] [முனைவர் எம்.எச். ஜவாஹில்லா]

காமன்வெல்த் உச்சி மாநாட்டிலே இந்தியா எந்த வடிவத்திலும் பங்குகொள்ளக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் அடுத்த மைக்கில் பேசுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என் அனுமதி இல்லாமல் நீங்கள் பேசுவதும், நிற்பதும் நியாயம் இல்லை. இது முறையல்ல. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) 15 நிமிடங்கள் பேச உங்களுக்கு அனுமதி கொடுத்தாகிவிட்டது. இதற்கு மேல் நீங்கள் பேசுவதற்கு அனுமதியில்லை. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பிரச்சினையை வேறு எங்கேயோ கொண்டு போகிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் தேவையில்லாமல் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கடந்த அக்டோபர் 24 ஆம் தேதி நிறைவேற்றிய தீர்மானத்திலே இரண்டு அம்சங்கள் இடம் பெற்றிருந்தன. (குறுக்கீடு) முதலாவதாக, இந்தியா எந்த வடிவத்திலும் இலங்கையிலே நடைபெறக்கூடிய காமன்வெல்த் உச்சி மாநாட்டிலே பங்குகொள்ளக் கூடாது. இரண்டாவதாக, இலங்கையை காமன்வெல்த் அமைப்பிலிருந்து நீக்குவதற்கு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கு நீங்கள் இடையூறு செய்ய வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் மாண்புமிகு உறுப்பினருக்கு இடையூறுதான் செய்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் 15 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். உங்களுக்கு நான் அனுமதி கொடுத்திருந்தேன். நீங்கள் பேச வேண்டியதைப் பேசிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.

[2013 நவம்பர் 12

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா எந்த வடிவத்திலும் கலந்துகொள்ளக் கூடாது என்பது மட்டுமல்ல, இலங்கையை காமன்வெல்த் அமைப்பிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கையை இந்தியா எடுக்க வேண்டுமென்று இரண்டு அம்சங்கள் கொண்ட தீர்மானத்தை நாம் அனைவரும் ஏகமனதாக சட்டமன்றத்தில் நிறைவேற்றினோம். (குறுக்கீடு) டாக்டர், இப்போது என் கருத்தைச் சொல்வதற்கு நீங்கள் அனுமதியுங்கள். என் கருத்தைப் பதிவு செய்வதற்கு நீங்கள் அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களுக்கும் மத்திய அரசு எந்த வகையிலும் செவிசாய்க்கவில்லை என்பதுதான் பேருண்மையாக இருக்கிறது. அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய தீர்மானத்திலே இது நமக்கு மிகுந்த மனவேதனை அளிக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) நான் இங்கே ஒன்றைச் சொல்ல வேண்டும். கனடா நாட்டினுடைய பிரதமர் Stephen Harper அவர்கள் Perth–லே நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டிலே அடுத்த மாநாடு இலங்கையிலே நடைபெறும் என்று அறிவிப்பு வந்தபோதே அதற்கு ஆதரவாக ராஜபக்சே பேச எழுந்தபோது ‘இரத்த வாடை அடிக்கக்கூடிய இந்த மனிதனுடைய பேச்சை நான் கேட்க விரும்பவில்லை’ என்று அவர் அந்த அவையிலிருந்து வெளியேறினார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதும் சில நாட்களுக்கு முன்பும்கூட, கொழும்பிலே நடைபெறவுள்ள காமன்வெல்த் மாநாட்டிலே பங்குகொள்ளக் கூடாது என்று கனடா முடிவெடுத்த பிறகு கனடாவினுடைய பிரதமர் Stephen Harper ஆண்மை நிறைந்த ஒரு வாசகத்தை உலகத்திற்கு அறிவித்தார். இலங்கையிலே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். நான் உங்களை அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதியில்லை.



2013 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

நீங்கள் உட்காருங்கள். நீங்கள் செய்வது முறையல்ல. இது சிறப்புக் கூட்டமாக இருக்கிறது. நீங்கள் நடந்து கொள்வது முறையல்ல. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எந்த வேண்டுகோளும் வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் செய்வது முறையல்ல.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கனடா பிரதமர் என்ன சொன்னார் என்றால்,. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, இன்னொரு உறுப்பினருடைய பேச்சில் குறுக்கிடாதீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கனடா பிரதமர் சொன்ன கூற்று, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேசியாகிவிட்டது. உட்காருங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** இந்தியாவினுடைய மனசாட்சிக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றது. (குறுக்கீடு) அவர் சொன்னார், “இலங்கையிலே காமன்வெல்த் மாநாட்டை நடத்துவதற்கு இலங்கை நாட்டிற்கு எந்தத் தகுதியும் இல்லை. (குறுக்கீடு) Sri Lanka has to answer to many questions of human right violations and genocide which happened in Sri Lanka” (மேசையைத் தட்டும் ஒலி) என்று Stephen Harper குறிப்பிட்டார். “இலங்கையிலே நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கும், அதேபோல இனப் பேரழிவுக்கும் இலங்கை பதில் சொல்ல வேண்டும். எனவே, நான் இந்த மாநாட்டிலே பங்குகொள்ளவில்லை” என்று எங்கேயோ பிறந்து இருக்கக்கூடிய கனடா நாட்டினுடைய பிரதமர் சொன்னார்.

இரவு 7–05

ஆனால், நாம் தமிழகச் சட்டமன்றப் பேரவையிலே தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு என்ன செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன? “We have to engage with Sri Lanka–அதாவது, காமன்வெல்த் மாநாட்டிலே நாம் பங்கு கொள்ளாவிட்டால் எப்படி இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தமுடியும்? அங்குள்ள

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 நவம்பர் 12

தமிழர்களுடைய நலனை எப்படிப் பேண முடியும்" என்றெல்லாம் பேசுகிறார்கள் ஒரு பக்கம். இன்னொரு பக்கம் "Tamil Nadu alone is not India; தமிழ்நாடு மட்டுமே இந்தியா ஆகாது. ஒரு மாநிலத்தின் மக்களுடைய உணர்வுகளுக்கு ஏற்ப எங்களுடைய வெளிவிவகாரக் கொள்கையை அமைத்துக்கொள்ள முடியாது" என்றெல்லாம் கூறுகிறார்கள். நம்முடைய தமிழகச் சட்டமன்றம் உணர்வுபூர்வமாக, தமிழகத்திலே வாழக்கூடிய மக்கள் மட்டும் அல்ல, உலகம் முழுவதும் வாழக்கூடிய மக்களுடைய உள்ளக் குமுறல்களை (மேசையைத் தட்டும் ஒலி) பிரதிபலிக்கக்கூடிய வகையில் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கொச்சைப்படுத்தப்படுகிறது.

நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன், மேற்கு வங்காளமும் இந்தியாவினுடைய ஒரு மாநிலம்தான். 1970–களின் பிற்பகுதிகளிலே, பக்கத்திலே இருக்கக்கூடிய, அன்று கிழக்கு பாகிஸ்தான் என்று அழைக்கப்பட்ட, இன்று பங்களாதேஷ் என்று அழைக்கப்படும் அந்த நாட்டிலே வங்காள மொழி பேசக்கூடிய மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் நடைபெற்றபோது, அங்கு மக்களைக் கொன்று குவித்தபோது, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள்—அதிலே காங்கிரஸ் கட்சியும் அடங்கும்—அன்று மேற்கு வங்காளத்தின் முதலமைச்சராகவும், முன்பு மத்திய அமைச்சராகவும் இருந்த சித்தார்த்த சங்கர் ரே, மிகத் தெளிவாக "எங்கள் வங்காளச் சகோதரர்களை கிழக்கு பாகிஸ்தானிலே கொன்று குவிப்பதை நாங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது" என்று சொன்னபோது, அதை ஒரு மாநிலத்தின் பிரச்சினையாக மத்திய அரசு அப்போது கருதவில்லை. மாறாக லோக் சபாவிலும், ராஜ்ய சபாவிலும் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தின் வாசகத்தை நான் இங்கே வாசிக்கின்றேன். "This House calls upon all peoples and governments of the world to take urgent and constructive steps to prevail upon the Government of Pakistan to put an end immediately to the systematic decimation of the people which amounts to genocide." என்று மிகத் தெளிவாக, மேற்கு வங்காளத்திலிருந்து எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து கிழக்கு பாகிஸ்தானிலே நடைபெறும் இனப் பேரழிவு நிறுத்தப்படுவதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய நாடாளுமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாம் இங்கே சட்டமன்றத்திலே



2013 நவம்பர் 12][முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

நிறைவேற்றியிருக்கின்றோம். நான் கேட்கின்றேன், நம்முடைய தொப்புள்கொடி உறவு மக்களான தமிழர்களைக் கொத்துக் கொத்தாக கொன்று குவித்தபோது "Sri Lanka should stop the genocide" என்று இந்திய நாடாளுமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்களா அல்லது ஐ.நா.-வின் பொதுச் சபையிலே பேசியிருக்கின்றார்களா என்றால், இல்லை. எனவேதான், தமிழர்கள் என்றால் ஒரு பார்வை, மற்றவர்கள் என்றால் இன்னொரு பார்வையா என்று நாம் கேட்க வேண்டியதாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? நீர்த்துப் போன நம்முடைய வெளிவிவகாரக் கொள்கைதான் என்று நான் சொன்னால் அது மிகையாகாது. 1950–களில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியாவின் பிரதமராக இருந்தபோது, அவர்கள் வெளி விவகாரத் துறை அமைச்சராகவும் இருந்தார்கள். பஞ்ச சீலக் கொள்கையை வகுத்தார்கள். அந்தக் கொள்கை, பிற நாடுகளுடன் அணி சேராமல், மனித நேயம், மனித உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்று சொல்கிறது. இந்தக் கொள்கையை மத்திய அரசு இப்போது தூக்கி எறிந்துவிட்டது என்று நான் சொன்னால் அது மிகையாகாது. வெறும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பிரச்சினையை அணுகுகிறார்கள். இதன் காரணமாகத்தான் இலங்கை நம்மிடம் அத்துமீறி நடக்கக்கூடிய நிகழ்வுகளைப் பார்க்கின்றோம். காமன்வெல்த் மாநாட்டில் நாங்கள் பங்குகொள்ளாவிட்டால், "தமிழக மீனவர்களின் பிரச்சினையை யார் பேசுவது" என்று கேட்கின்றார்கள். இவ்வளவு நாட்களும் பேசிக்கொண்டுதானே இருந்தீர்கள். எத்தனை ஆயிரக்கணக்கான, தமிழக மக்கள், குறிப்பாக என்னுடைய இராமநாதபுரம் தொகுதியைச் சேர்ந்த மீனவர்கள் எத்தனை பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்? எத்தனை படகுகள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன? எத்தனை ஏழை எளிய மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்டிருக்கின்றன? இன்றும்கூட 35 படகுகளை இலங்கை அரசுடைமையாக்கி இருக்கின்றதே! What happened to your engagement? "இலங்கையுடன் நாங்கள் engage செய்ய வேண்டும். அவர்களுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதனால் காமன்வெல்த் மாநாட்டுக்கு இந்தியா செல்ல வேண்டும்" என்று சொல்வது, மக்களை ஏமாற்றக்கூடிய மிகப் பெரிய ஒரு செயலே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதை மிகத் தெளிவாக நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா][2013 நவம்பர் 12 இரவு *7–10*

இன்னொன்றையும் மறந்துவிட்டார்கள். பிரதமர் செல்லவில்லை. சல்மான் குர்ஷித், வெளி விவகாரத் துறை அமைச்சர் செல்கிறார். "அங்கு செல்வதால் ஈழத்திலே நடைபெற்ற பிரச்சினைகளையெல்லாம் பேசுவதற்கான வாய்ப்பு அங்கே கிடைக்கும்" என்று குறிப்பிடுகின்றார்கள். நான் சொல்கின்றேன். இலங்கையிலே காமன்வெல்த் உச்சி மாநாடு நடைபெறும்போது, ராஜபக்சே அதனுடைய தலைவராக வரும்போது, ஈழம் தொடர்பாக என்ன பிரச்சினையைப் பேசினாலும் காமன்வெல்த் நாடுகளினுடைய அந்தக் கூட்டமைப்பினுடைய அவைத் தலைவர் என்ற முறையிலே, he has the veto power to dismantle everything. அந்த veto power–மூலம் ஈழம் தொடர்பாகக் கொண்டுவரக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளையும் நிர்மூலம் ஆக்கக்கூடிய ஓர் அதிகாரம் ராஜபக்சேவுக்கு கிடைக்கின்றது. இங்கே கவனிக்கவேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், மிகவும் கூர்மையாக கவனிக்க வேண்டுமென்ற விஷயம் என்னவென்றால், இதுவரை இலங்கையிலே நடைபெற்ற தமிழினப் பேரழிவுக்கு, அதைப் பற்றி விரிவாகவே நாம் பேசிவிட்டோம்—ஊடகங்களிலே வந்துகொண்டிருக்கிறது. பத்திரிகையாளர் இசைப்பிரியா எப்படி பாலியல் வல்லுறவிற்கு, பலாத்காரத்திற்கு இலக்காகி சித்ரவதை செய்யப்பட்டார் என்பதை கண்ணீர் மல்க சேனல் *4*–லே உலகம் பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய சூழலில், இதையெல்லாம் முன்னின்று நடத்திய ராஜபக்சேவுக்கு, இதற்கெல்லாம், தண்டனை வேண்டாமா? உலகத்தினுடைய மனசாட்சியை நாம் தட்ட வேண்டாமா? அது எப்போது நடக்கும்?

இந்த காமன்வெல்த் மாநாடு இலங்கையிலே நடைபெறுவதையே இந்தியா தடுத்திருக்க வேண்டும். அதைத் தடுக்கவில்லை என்பது ஒரு விவகாரம். சரி, அது போனால் போகட்டும். இப்போதாவது இந்தியா, கனடா பிரதமர் சொன்னதுபோல, "இந்த விவகாரங்களுக்காக இலங்கையைத் தண்டிக்க வேண்டும்; எனவே, நாங்கள் இந்த காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்கின்றோம், பிரதமர் மட்டுமல்ல, வெளி விவகாரத் துறை அமைச்சர் மட்டுமல்ல, கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தினுடைய ஒரு கடைநிலை சிப்பந்திகூட பங்குகொள்ளமாட்டார்" என்று சொல்லி, நம்முடைய தமிழக சட்டமன்றத்தினுடைய தீர்மானத்திற்கு உயிர் வடிவம் கொடுத்திருந்தால், உலக நாடுகள் ராஜபக்சேவையும் அந்த



2013 நவம்பர் 12] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

அரசு நடத்திய அராஜகத்தையும் தட்டிக் கேட்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கும். ஒரு வரலாற்றுப் பிழையை மத்திய அரசு செய்திருக்கின்றது. அதைச் சரி செய்வதற்காக வேண்டிதான் இன்று மிகச் சிறப்பான முறையிலே இந்தத் தீர்மானத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை முழுமையாக வழிமொழிந்து அமர்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேசியாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் செய்வது முறையல்ல. இது சிறப்புக் கூட்டமாக இருக்கிறது. முக்கியமான தீர்மானமாக இருக்கிறது. நீங்கள் செய்வது முறையல்ல. (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் இதுமாதிரி செய்வதெல்லாம் பேரவைக்கு நல்லதல்ல. (குறுக்கீடு) நீங்கள் செய்வது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, *17* நிமிடங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, ஒரு நிமிடம்கூடக் கிடையாது. திரு. ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ரெங்கராஜன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதன்முதலாக நான் இந்த நேரத்திலே மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் அவர்கள் தமிழக மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, சட்டமன்றத்திலே நாம் இயற்றிய தீர்மானத்திற்கு மதிப்பளித்து, மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், பல்வேறு அமைச்சர்கள், மரியாதைக்குரிய தலைவர் வாசன் அவர்கள் உட்பட பல்வேறு தலைவர்கள் விடுத்த வேண்டுகோள், இவற்றையெல்லாம் மனதில்கொண்டு மாநாட்டில் பிரதமர் கலந்துகொள்ளச் செல்லவில்லை என்று அறிவித்ததற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியை காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. என். ஆர். ரெங்கராஜன்][2013 நவம்பர் 12

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையைப் பொறுத்தவரையிலே நம்முடைய அண்டை நாடாக இருந்துகொண்டிருக்கிறது. மத்திய அரசுக்கு என்று பல்வேறு பொறுப்புகள் இருக்கின்றன. வெளியுறவுக் கொள்கை இருக்கின்றது. நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புகளும் மிக அதிகமாக இருக்கின்றன. (குறுக்கீடுகள்) நாட்டுப் பாதுகாப்பு எங்களுக்குத்தானே இருக்கிறது? மத்திய அரசுக்குத்தானே இருக்கிறது? (குறுக்கீடுகள்) இதில் என்ன தவறு இருக்கிறது? அப்படிப்பட்ட காலகட்டத்தில் இந்தச் சட்டமன்றத்திலே இத்தகைய ஒரு தீர்மானத்தை மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்தபொழுது எங்களுடைய தலைவர்கள் பேசியது, "நாளை, அந்த உறவு துண்டிக்கப்பட்டு விட்டது என்று சொன்னால், அங்கு இருக்கக்கூடிய எட்டு இலட்சம் தமிழர்களுடைய நிலைமையை யார் பார்ப்பது, யார் பேசுவது?" என்ற கோரிக்கையை வைத்துத்தான் நாங்கள் பேசினோம். இது உண்மை. (குறுக்கீடுகள்) கேலியும், கிண்டலும் செய்ய வேண்டாம். உண்மை நிலையை உணர்ந்து பேசவேண்டும். யாராக இருந்தாலும், உண்மையை உணர்ந்து பேசவேண்டும். இதில் கேலி, கிண்டல் செய்வதற்கு ஒன்றும் இல்லை.*

*இரவு 7–15*

*எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், அங்கே போர் முடிவுற்ற பிறகு, இன்றைக்கு 4,000 கோடி ரூபாய் அளவிற்கு வீடுகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், சாலைகள், பேருந்துகள், படகுகள், போக்குவரத்து தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு, குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களிலே உள்ள பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களுக்கு இந்தியா உதவி செய்து வருகின்றது. இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட இந்த காமன்வெல்த் மாநாட்டை கொழும்பில் நடத்த தீர்மானித்து இரண்டு ஆண்டு காலம் ஆகின்றது. இதற்கிடையில் இந்தியாவின் அழுத்தத்தால் வடக்கு மாகாணத்திலே தேர்தல் நடைபெற்று தமிழர் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றி, திரு. விக்னேஸ்வரன் அவர்கள் முதலமைச்சராக ஆகியிருக்கிறார் என்று சொன்னால், அதற்கு இந்தியா கொடுத்த அழுத்தம்தான் காரணம். அவர்களே பாரதப் பிரதமர் இலங்கைக்கு வரவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கின்றார் என்ற*



2013 நவம்பர் 12] [திரு. என். ஆர். ரெங்கராஜன்]

*செய்தியை செய்தித்தாள் மூலமாக நாங்கள் படித்தோம். எனவே, எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இன்றைக்கு பாரதப் பிரதமர் அவர்கள் அதைப் புறக்கணித்திருக்கிறார் என்று சொன்னால், தமிழக மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டுதான் அவர்கள் அதைப் புறக்கணித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன். (குறுக்கீடு) என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள். ஏற்கெனவே, இதற்கு முன்னால் அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்கள் இலங்கைக்குச் சென்று அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அதற்குப் பின்பு தற்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பு அங்கு சென்று அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் புதியதாக ஒன்றும் செல்லவில்லை என்பதற்காகச் சொல்ல வருகிறேன். எனவே, தமிழக மக்களுக்குக் கொடுக்கக்கூடிய முழு மரியாதையாக, பாரதப் பிரதமர் அவர்கள் இலங்கைக்குச் செல்லவில்லை. வருங்காலத்திலே இலங்கையில் இருக்கக்கூடிய தமிழக மக்கள் நலமுடன் இருக்கவேண்டுமென்று சொன்னால், இப்போது மத்திய அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை சரி என்பதை மட்டும் சொல்லி அமைகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தையும் தீர்மானத்திற்கு முன்பு, இந்தத் தீர்மானத்திற்கான காரண, காரியங்களைப் பற்றிச் சொல்லியதையும் இணைத்து இந்திய கம்யூனிஸ்டு கட்சி வழிமொழிந்து, இந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய அத்தனை அம்சங்களையும் . . .*

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் வந்து தரையில் அமர்ந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இது முறையல்ல. இப்படிப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் இப்படிச் செய்வது முறையல்ல. இது ஒரு*

சிறப்புக் கூட்டமாக இருக்கிறது. ஒரு முக்கியமான தீர்மானத்தின்மீது விவாதம் நடக்கிறது. இதை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்காமல், டாக்டர் கிருஷ்ணசாமி இதுபோல இடையூறு செய்வதால், அவரை அவையிலே இருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)*

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இலங்கை நாட்டில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டுமென்று முன்மொழிந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தின்மீதும் தீர்மானத்திற்கான காரண காரியங்களை விளக்கிப் பேசியதையும், இரண்டையுமே இணைத்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சி வழிமொழிந்து, தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய அத்தனை அம்சங்களையும் பாராட்டுவதோடு, இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது.

இந்தத் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய அம்சங்கள் வரவேற்கத்தக்கவை. இன்றையதினம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானமாக இந்தப் பேரவையிலே இது முன்மொழியப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்மானத்தில் "காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து வெளியுறவுத் துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழு செல்கிறது என்று அறிவித்துள்ள மத்திய அரசின் முடிவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது" என்று ஒரு நாசுக்கான வார்த்தையைப் போட்டிருப்பது என்பது மத்திய அரசாங்கத்தைப் புண்படுத்தக்கூடாது என்ற முறையில் போடப்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

இரவு *7–20*

ஆனால், மத்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கையோ, தமிழ் இனத்தை முற்றிலுமாக இலங்கையில் அழித்துக்



கொண்டிருக்கக்கூடிய ராஜபக்சேவுக்கு ஆதரவாக உள்ளது. இந்திய நாடு இராணுவ உதவிகளைச் செய்து, இராணுவத் தளவாடங்களையும் கொடுத்து, இராணுவத்தையும் அனுப்பி வைத்து, தமிழ் இனத்தையே அழிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு, இலட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்ததற்குப் பின்னரும்கூட, நம்முடைய தமிழக சட்டமன்றத்தில் *8–6–2011* ஆம் தேதி அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், *27–3–2013* ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம்; *24–10–2013* ஆம் தேதியன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பின்னரும்கூட, 'செவிடன் காதில் ஊதிய சங்கைப்போல' எதைப்பற்றியுமே கண்டுகொள்ளாமல், கவலைப்படாமல், தமிழ் இனம் அழிந்து கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிக்கூட கவலைப்படாமல் இருந்து கொண்டிருக்கக்கூடிய மத்திய அரசாங்கம் குறித்து, இன்றையதினம் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தில், 'ஆழ்ந்த வருத்தம்' என்று சொல்லியிருப்பது, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுவதாக நான் கருதுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).* அதற்கு மாறாக, மத்திய அரசாங்கத்தைக் கண்டனம் செய்து இத்தீர்மானத்தை நிறைவேற்றியிருக்க வேண்டுமென்பதே இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய ஆழமான கருத்தாக நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புலம்பெயர்ந்த தமிழர்களாக இருந்தாலும் சரி, மலையகத் தமிழர்களாக இருந்தாலும் சரி, உலகம் முழுவதும் இருக்கக்கூடிய தமிழர்கள் எங்கிருந்தாலும்கூட அந்தத் தமிழர்களைப் பாதுகாப்பதில் அரணாக *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதனை நான் இந்த அவையிலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தீர்மானத்திலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று, 'காமன்வெல்த் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதன்மூலம் இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற செயலை, மனிதநேயமற்ற செயலை இந்தியா ஏற்றுக்கொள்கிறது' என்று சொல்லியிருக்கக்கூடிய வாசகம் சரியான வாசகம்தான். அதைவிடக் கூடுதலாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், "பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் காமன்வெல்த் மாநாட்டிலே கலந்துகொள்ள மாட்டார்கள்; மாறாக இந்தியாவில்

[திரு. எம். ஆறுமுகம்] [2013 நவம்பர் 12

இருக்கக்கூடிய பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்" என்று இந்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய, தமிழர்கள் என்று சொல்லக்கூடிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினுடைய ஆட்சியிலே இடம்பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், இன்னும் இருக்கக்கூடிய நம்முடைய தமிழகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய, தமிழர்கள் என்று சொல்லக்கூடிய, அமைச்சர் பெருமக்களெல்லாம், தமிழக சட்டமன்றத்திலே 24 ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், மத்திய கேபினெட் கூட்டத்தில் கலந்துகொண்டு இந்திய நாடு காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது என்று அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். ஏன் தங்களுடைய கருத்துகளை அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை என்று நான் இந்த நேரத்திலே கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, தமிழகத்திற்கு வந்தால் ஒன்றைப் பேசுவதும், டில்லிக்குச் சென்றால் தங்களுடைய கருத்தை வேறுவிதமாகப் பேசுவதும் ஒட்டுமொத்தமாக தமிழ் இனத்தை அழிப்பதற்கான முறையிலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் செயல்பாடு இருந்துகொண்டிருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகத் துறையில் பணியாற்றிய 'இசைப்பிரியா' என்பவரை பாலியல் துன்பத்திற்கு உள்ளாக்கி படுகொலை செய்திருக்கக்கூடிய காட்சியை நம்மால் பார்க்க முடிந்தது. பிரபாகரனுடைய மகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டிருப்பதை நம்மால் பார்க்க முடிந்தது. அதற்குப் பின்னர் இலங்கை அரசு போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளது உண்மை என்று சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது; இலங்கை அரசு போர்க் குற்றங்களைப் புரிந்துள்ளது என்பது சர்வதேச ரீதியாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணையை நடத்த வேண்டிய இச்சூழ்நிலையில், காமன்வெல்த் மாநாடு இலங்கையில் நடைபெறுவதன்மூலம் இலங்கை அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்களை உறுப்பு நாடுகள் மூடி மறைப்பதற்காகவே என்று பொருள்கொள்ள முடியும் என்பதனை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2013 நவம்பர் 12] [திரு. எம். ஆறுமுகம்]

ஜனநாயகம், மனித உரிமை போன்றவையெல்லாம் அங்கே மீறப்பட்டிருக்கின்றன. இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். இரத்தக் கறை படிந்த ராஜபக்சே நடத்தும் மாநாட்டை உலக நாடுகள் புறக்கணிக்க வேண்டுமென ஈழத் தமிழர்களினுடைய கூட்டமைப்பு கோரிக்கை வைத்துள்ளது. கனடா நாட்டு பிரதமர், தான் கலந்துகொள்ளவில்லை என்று அறிவித்திருக்கின்றார்கள். இதற்குப் பின்னராவது, கொலைகார, இனவெறி அரசு நடத்தக்கூடிய இலங்கையில் நடைபெறக்கூடிய காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்பது மட்டுமல்ல, மிக முக்கிய அம்சமாக, இலங்கை நாட்டில் *13–11–2013* அன்று நடைபெறவிருக்கும் வெளியுறவுத் துறை அமைச்சர்களுக்கான கூட்டத்திலோ, *15–11–2013* முதல் *17–11–2013* வரை நடைபெறவுள்ள காமன்வெல்த் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டிலோ பெயரளவிற்குக்கூட இந்தியா சார்பில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்றும் தெள்ளத் தெளிவாக இந்தத் தீர்மானத்திலே குறிப்பிட்டு இருப்பது என்பது நிச்சயமாக வரவேற்கக்கூடிய ஒன்று. சாதத்தை இறுத்த மாதிரி, "மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்ளமாட்டார், வேறு யாரும் கலந்துகொள்ளலாம்" என்ற வகையில் பேசுவது சரியான நடவடிக்கை அல்ல.

இரவு *7–25*

ஏற்கெனவே தமிழக சட்டமன்றம் நிறைவேற்றியிருக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்பு மிக்க அரசினர் தீர்மானத்தை உதாசீனப்படுத்தக்கூடிய முறையில் இந்திய அரசாங்கம் செயல்படுவதை கண்டனத்திற்குரியதாகவே கருத வேண்டும். எனவே, இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பாக வழிமொழிந்து, இது சிறப்பான தீர்மானம், வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானம், ஒட்டுமொத்தத் தமிழர்களுடைய, (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் முழுவதும் இருக்கக்கூடிய தமிழர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தீர்மானம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவசர அவசரமாக இன்றையதினம் தமிழகச் சட்டமன்றம் மாலை *6–00* மணிக்குக் கூட்டப்பட்டிருக்கின்றது. எப்படிப்பட்டத் தீர்மானத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டுவரப் போகின்றார்கள் என்று உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில், இப்போது முன்மொழியப்பட்டிருக்கிற

[திரு. எம். ஆறுமுகம்] [2013 நவம்பர் 12

இந்தத் தீர்மானத்தை அனைவரும் பாராட்ட வேண்டும், வரவேற்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மனதாரப் பாராட்டி, இதை வழிமொழிந்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழ் மக்களின் இன்னல்கள் தீரவும், துயர் மாயவும் இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்த அவை ஏற்கெனவே தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறது. இலங்கைத் தமிழ் மக்களின் மீள்குடியமர்த்தல் இன்னும் முழுமை பெறவில்லை; அதிகாரப் பரவல் நடைபெறவில்லை; இராணுவம் அகற்றப்படவில்லை. 13–வது அரசியல் சட்டத் திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்யவே இலங்கை அரசு முயற்சிக்கிறது. ஆயுத மோதலின்போது செய்யப்பட்ட இராணுவ அத்துமீறல்கள், மருத்துவமனை, பள்ளிக்கூடம் என்று வேறுபாடே இல்லாமல், குண்டு வீசி அப்பாவிகளைக் கொன்ற கொடூரம், பலர் மர்மமாய் காணாமல் போன சம்பவங்கள் போன்ற மனித உரிமை மீறல்கள்மீது விசாரணைக்கு தன்னை உட்படுத்திக்கொள்ள இலங்கை அரசு மறுத்து வருகிறது. ஏற்கெனவே சர்வதேச மன்றங்களில் இவை எதிரொலிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கைகள் பலவற்றில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சி மாறுபட்டுள்ளது. உதாரணத்திற்கு அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை எதிர்த்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்குக் கொடுத்துவந்த ஆதரவையே மார்க்சிஸ்ட் மற்றும் இடதுசாரிக் கட்சிகள் திரும்பப் பெற்றன. இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் மத்திய அரசு தனக்கு இருக்கும் ராஜ்ய வாய்ப்புகளை வலுவாகவும், முழுமையாகவும் பயன்படுத்தத் தவறியுள்ளது என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அழுத்தமான கருத்து. காமன்வெல்த் மாநாட்டில் இந்திய அரசு கலந்துகொள்ளக் கூடாது என்று இந்த அவை ஏற்கெனவே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இந்நிலையில் முந்தைய தீர்மானமே போதுமானது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சி கருதுகிறது. இப்போதும் இலங்கைத் தமிழர்கள் சம வாய்ப்பும், சம உரிமையும் பெறவும் மனித உரிமை மீறல்களுக்கான விசாரணைகளுக்கு இலங்கை



2013 நவம்பர் 12] [திரு. அ. சவுந்தரராசன்]

அரசை உட்படுத்தவும், தமிழர் பகுதிக்கு அதிகாரப் பரவல் கிடைக்கவும் 13–வது அரசியல் சட்டத்தை நிறைவேற்றி அமல்படுத்தவும் இந்திய அரசு இலங்கை அரசின்மீது தனது ராஜ்ய அழுத்தத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கருத்தை இந்த மன்றத்தில் பதிவு செய்து, நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெற்ற தமிழினப் படுகொலையையும், போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் கண்டிக்கின்ற வகையிலும், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், அவர்களுடைய உயிர்களையும், உடைமைகளையும், உரிமைகளையும் பாதுகாக்கக்கூடிய வகையிலும், ஈழத் தமிழர்கள் அவர்கள் விரும்பும் அரசியல் தீர்வை அவர்களே முடிவெடுத்துக்கொள்ளும் வண்ணம் ஐ.நா. மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிக்கின்ற வகையிலும், அதற்காக மத்திய அரசை வற்புறுத்துகிற வகையிலும் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய அரசினுடைய இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று, வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை தேசிய முற்போக்கு திராவிட கழகம் வரவேற்கிறது, ஆதரிக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். காமன்வெல்த் மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் செல்லக் கூடாது என்பது மட்டுமல்ல, இந்திய நாட்டிலிருந்து ஒரு துரும்புகூட செல்லக் கூடாது என்பதுதான் இந்த மாமன்றம் மட்டுமல்ல, உலகிலே இருக்கக்கூடிய ஒட்டுமொத்தத் தமிழர்களுடைய எதிர்பார்ப்பு என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். ராஜபக்சே தமிழினப் படுகொலையை நடத்தியிருக்கிறார். ஒன்றரை இலட்சம் தமிழர்களைக் கொத்துக் குண்டுகளை வீசிக்

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2013 நவம்பர் 12

கொன்றிருக்கிறார். ஒரு குற்றவாளியாக உலக நாடுகளுக்கு முன்னே கைகட்டி நிற்க வேண்டிய ஒருவரை, அவர் குற்றவாளி அல்ல, அவருக்கு punishment கொடுக்க வேண்டிய நேரத்திலே அவருக்கு reward கொடுக்கின்ற வகையிலே, காமன்வெல்த் மாநாடு அவருடைய நாட்டிலே நடப்பதற்கு இன்றைக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறது இந்திய அரசு, மத்திய அரசு. இதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இரவு *7–30*

*2009* இல் அந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டாலும்கூட, *2009*-க்குப் பிறகு இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் கொல்லப்பட்ட தமிழர்களைத் தவிர்த்து மீதி இருக்கின்ற தமிழர்களின் வாழ்வாதாரத்திற்கு இலங்கை அரசு ஏதேனும் செய்திருக்கிறதா என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. அங்கே மீதம் இருக்கின்ற தமிழர்கள் இன்னும் முள்வேலிக்குள்தான் இருக்கின்றார்கள். அதைவிடக் கொடுமை, தமிழர்கள் இருந்த இடங்களையெல்லாம் இராணுவம் கைப்பற்றி அங்கே சிங்களர்களை குடியேற்றிக் கொண்டிருக்கிறது. இது எந்த வகையில் நியாயம் என்பதைக் கேட்க யாரும் தயாராக இல்லை.

அதேபோல, ஐ.நா. மனித உரிமை ஆணையத்திலிருந்து நவநீதம் பிள்ளை அவர்கள் இலங்கைக்குச் சென்று விசாரணை நடத்துகிறார்கள். அவரை பெண் விடுதலைப் புலி என்று சொல்லி அந்த நாட்டிலே இருப்பவர்கள் கொச்சைப்படுத்துகிறார்கள். இப்படி, சர்வதேச சமுதாயத்தையும் மதிக்கவில்லை, இந்திய அரசு சொல்வதையும் கேட்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. இன்றைக்கு இந்தியா அருகிலே இருந்துகொண்டு இலங்கைக்கு மிக பக்கபலமாக இருக்கின்ற காரணத்தினால்தான், இலங்கை அரசு இப்படிப்பட்ட துணிச்சலான முடிவுகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையிலுள்ள தமிழர் பிரச்சினை மட்டுமல்ல, அதைக் காரணம் காட்டி நானூற்றுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டும், தாக்கப்பட்டும் உள்ளனர். அதைவிட ஒரு கொடுமை, தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளை இலங்கை அரசினுடைய தேசியச் சொத்தாக அந்த நாட்டினுடைய நீதிமன்றம் அறிவிக்கிறது. இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம்



2013 நவம்பர் 12] [திரு. வி.சி. சந்திரகுமார்]

இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றன என்று சொன்னால், இந்திய அரசினுடைய கையாலாகாத்தனம் என்றுதான் இதைச் சொல்லமுடியுமே தவிர, வேறெதுவும் சொல்லமுடியாது. அங்கே இந்துக் கோயில்கள் இடிக்கப்படுகின்றன. கிறிஸ்துவ தேவாலயங்கள் இடிக்கப்படுகின்றன. இஸ்லாமியர்களின் மசூதிகள் இடிக்கப்படுகின்றன. அங்கேயெல்லாம் புத்த விஹாரங்கள் எழுப்பப்படுகின்றன. ஒட்டுமொத்தத்திலே இனப்படுகொலை மட்டுமல்ல மனித உரிமை மீறல்கள் மிக அதிக அளவிலே அரங்கேறியிருக்கின்றன என்பதற்கு வேறு சாட்சிகள் தேவையில்லை.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு எங்கள் தலைவர் கேப்டன் அவர்கள் உள்ளிட்ட நாங்களெல்லாம் சேனல்–*4* என்ற தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட ஒரு வீடியோவைப் பார்த்தோம். உண்மையாகச் சொல்கிறோம் அன்றைக்கு இரவு அதைப் பார்த்ததற்குப் பிறகு, எங்கள் யாருக்கும் தூக்கம் வரவில்லை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தமிழனாகப் பிறந்துவிட்டதால் மட்டும் நமக்கு அந்தப் பரிதாபம் வரவில்லை. ஆனால், இலங்கையில் இருக்கின்ற தமிழனுக்கு ஏற்பட்ட நிலை உலகளவில் எந்தவொரு மொழி பேசுபவனுக்கும் ஏற்படக் கூடாது என்று ஆண்டவனிடம் நாங்கள் பிரார்த்தித்தோம்.

இன்றைக்கு இலங்கையில் காமன்வெல்த் மாநாடு நடத்துவதற்கு இந்தியா ஒத்துழைப்பு அளித்துக்கொண்டிருக்கிறது. அப்படி ஒத்துழைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, ராஜபக்சே இரண்டு வருடம் அந்த அமைப்பின் தலைவராக இருப்பார். அதனால் என்ன, இருந்துவிட்டு போகட்டுமே, என்று நினைக்கலாம். ஆனால், இந்தக் காமன்வெல்த் மாநாடு நடைபெறுவதாலே, காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ளும் *54* உறுப்பு நாடுகளிலிருந்து வந்திருக்கிற அரசு மற்றும் தனியார் துறைகளிடமிருந்து பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் அந்த நாட்டில் குவியப்போகின்றன. இதை ஏன் சொல்கிறேன் என்றால், மிகப் பெரிய ஒரு குற்றத்தை நிகழ்த்திவிட்டு ஒரு சமுதாயத்தை, ஓர் இனத்தையே அழித்தவருக்கு அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பைக் கொடுப்பதற்கு இந்தியா எப்படித் துணை போகலாம் என்பதுதான் எங்களுடைய கேள்வி.

அதேநேரத்தில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே இன்னொரு கோரிக்கையையும் இந்த இடத்திலே

[திரு. வி.சி. சந்திரகுமார்] [2013 நவம்பர் 12

வைக்கின்றோம். காமன்வெல்த் மாநாட்டிற்கு இந்தியா போகக்கூடாது என்பது மட்டுமல்ல, இந்த நேரத்திலே காமன்வெல்த் அமைப்பிலிருந்து இலங்கையை நீக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எல்லா அரசியல் இயக்கங்களும், ஒட்டுமொத்த தமிழ்நாடும் இன்றைக்கு அரசை ஆதரித்துக்கொண்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை ஆதரித்துக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே காமன்வெல்த் அமைப்பிலிருந்து இலங்கையை நீக்கவேண்டும் என்று ஒட்டுமொத்தமாக நாம் அதற்குப் போராட வேண்டுமென்று சொல்கிறேன். *(குறுக்கீடு)* வாசகம் இருக்கிறது இல்லையென்றெல்லாம் நான் மறுக்கவில்லை. ஏனென்று சொன்னால், நைஜீரியாவில் 1995–ல் ஓர் எண்ணெய் நிறுவனத்திற்கு எதிராகப் போராடியதற்காக ஒரு பத்திரிகையாளரை அந்த நாட்டு அரசு தூக்கிலிட்டுக் கொன்றது. அடுத்த நிமிடமே அந்த நைஜீரியா நாடு காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டது. ஒரு தனி மனிதனுக்காக அந்த நாட்டையே காமன்வெல்த் அமைப்பு வெளியேற்றியிருக்கிறது. அப்படி இருக்கின்றபோது இலட்சக்கணக்கிலே கொல்லப்பட்டிருக்கக்கூடிய நம் தமிழ் மக்களுக்காக காமன்வெல்த் அமைப்பிலிருந்து இலங்கையை நீக்க வேண்டுமென்று சொன்னால், இந்தியா அதற்கு முதல் குரல் கொடுக்க வேண்டும். அதற்கு இன்னும் இந்த அரசு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தாலும் அதற்கு தேசிய முற்போக்கு திராவிட கழகம் துணையிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு *7–35*

தமிழ் உணர்வு என்பது எங்களுக்கும் இருக்கிறது. அதே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக பாரதப் பிரதமர் அவர்கள் சென்னை வந்தபோது, எங்களுடைய தலைவர் கேப்டன் அவர்களுடைய தலைமையிலே அவருக்குக் கருப்புக் கொடி காட்டுவதற்காக அந்த காலகட்டத்திலே நாங்கள் முயற்சி எடுத்தோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், எந்தக் காலத்திலும், எந்தச் சூழலிலும், இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே நேரத்திற்குத் தகுந்தாற்போல் இரட்டை வேடம் போடக்கூடிய இயக்கம் அல்ல, எங்கள் தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். மேலும், இலங்கையிலே ஒன்றரை இலட்சம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட செய்தி கிடைத்த அடுத்த அரை மணி நேரத்திலே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற எங்களுடைய கட்சியின் கொடிகளை அரைக் கம்பத்திலே பறக்கவிட்டு, அவர்களுக்கு எங்களுடைய அனுதாபத்தையும் தெரிவித்தோம் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்து, இந்தத் தீர்மானத்தின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த எங்கள் தலைவர் கேப்டன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை தேசிய முற்போக்கு திராவிட கழகம் ஆதரிக்கிறது என்று சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



2013 நவம்பர் 12] [திரு. வி.சி. சந்திரகுமார்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதயத்தால் சிந்திப்பவர்தான் முழு மனிதன் என்பர். கூராயுதம் ஏந்தி, ஓராயிரம் எதிரிகள் ஓரணி திரண்டாலும், இருவிரல்தனை ஈட்டியாக்கி, ஈகையை வாகையாக்கி, புரட்டர்களை புறமுதுகு காட்டச் செய்யும் புறநானூற்றின் புது வடிவம், மாண்புமிகு அம்மா அவர்களது *(மேசையைத் தட்டும் ஒலி)* இதயத்து சிந்தனையின், தாய்மை அன்பின் வெளிப்பாடாகவே இத்தீர்மானம் அமைந்துள்ளது.

கடலோர அலைகள் கரையில் மோதிச் சிதறும் காட்சியை குருவும், அவரது சீடர்களும் காண்கிறார்கள். முதலாவது சீடனைப் பார்த்து குரு கேட்டார், “உங்களுக்கு என்ன தெரிகிறது?” என்று. “திரும்பத் திரும்ப வந்து மோதும் அலைகளின் விடாமுயற்சி தெரிகிறது” என்றார் அவர். அடுத்த சீடனைக் கேட்டபோது, அவர் சொன்னார், “துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும் கரையைப் போல் உறுதியாக நின்றால், சிதறிப் போகும் துன்பம் என்றார்”. “சில நேரங்களில் அலையாகவும், சில நேரங்களில் கரையாகவும் இருப்பதே வாழ்க்கைத் தத்துவம்” என்றார் குரு.

நதி காக்க, மொழி காக்க, கன்னித் தமிழ் பூமி காக்க, கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி, எங்கள் தமிழினக் குடி காக்க, அவதரித்த அன்னைத் திருமகள், *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்கள், அலைகளாக, விடா முயற்சியோடு சோதனைகளை எதிர்கொண்டு சாதனையாக்குகிறார்கள். தமிழினம் காக்க, கரை போல, என்றென்றும் உறுதியாக நிற்கிறார்கள்.

பிரச்சினைகளும், எதிர்ப்புகளும் இல்லாமல் ஒருவர் அடையும் வெற்றியை ‘Victory’ என்கிறோம். பிரச்சினைகளையும்,

எதிர்ப்புகளையும் எதிர்கொண்டு, சமாளித்து வெற்றி பெறுபவரே 'History'–யில் இடம் பெறுகிறார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரம் பிரச்சினைகளைச் சந்தித்து, தீர்க்கமாக முடிவெடுத்து, செயலாற்றி வரும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஒவ்வொரு செயலும் 'History'–யில் இடம்பெற்று, தமிழ் மக்களைத் தாங்கும் தூண்களாக அமையும்.

ஏழரை கோடி தமிழ் மக்கள் முன்மொழிய, 127 கோடி இந்தியர்கள் வழிமொழிய, செங்கோட்டையை ஆளப்போகும் செந்தமிழர் சீதனம், (மேசையைத் தட்டும் ஒலி) கோடி சிங்கங்களின் தைரியம் குடியிருக்கும் வீரத் திருமகள், மாண்புமிகு அம்மா அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை மொழிந்துள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளோடு என்னுடைய கருத்துகளையும் இணைத்துக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 2. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 7–39 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

*****